1089

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்

மஜ்லிஸுல் உல்மாவின் உபசம்பிரதாயகரும்
சென்னை பிரம்பூர் மத்ரஸா ஜமாலியயா
வின் பிரதம ஆசிரியருமாகிய மகா
கனம் மௌலானா மௌலவி
ப. சே. ஹாஜி முஹம்மத்
மதார் சாஹிபவர்கள்

# ஜீவிய சரித்திரம்

இஃது
மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்
பண்டிதராக விருந்தவரும், ஜமாலிய்யா கல்லூரி
போதகாசிரியருமாகிய திருமக்கோட்டை
K. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களால்
இயற்றப்பட்டு ஜமாலிய்யா
கல்லூரி மாணவர்களால்

சென்னை :
ஸ்ரீ ராமா பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1925

Q7:4198wx
N25
181991

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்

மஜ்லிஸுல் உல்மாவின் உபசபாநாயகரும்,
சென்னை பிரப்பூர் மீத்ரஸா ஜமாலிய்யாவின்
பிரதம ஆசிரியருமாகிய மகாகனம் மௌ
லானா மௌலவி ப. சே. ஹாஜி
முஹம்மத் மதார்
சாஹிபவர்கள்

# ஜீவிய சரித்திரம்

இஃது
ஜனாப். M. J. ஜமால் மோஹ்யதீன் சாஹிப்பவர்கள்
பொருள் உதவியால் முஸ்லிம் உலகமெலாம் உலவுமாறு

——:o:——

மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டி
தராக விருந்தவரும், ஜமாலிய்யா கல்லூரி போதகாசிரியரு
மாகிய திருமக்கோட்டை K. ஸ்ரீநிவாஸய்யங்கார்
அவர்களால் இயற்றப்பட்டு
பதிக்கப்பட்டது.

ஸ்ரீ ராமா பிரஸ், 15, பிராட்வே, மதராஸ்.

## அவையடக்கம்

ஜலதாரை வீழு நீருஞ் சாகரந் தன்னைச் சேர்ந்தால்
குலமென்றே கொள்வதல்லால் குரைகடல் வெறுப்பதுண்டோ
புலவர்தம் சபையைநாடிப் புன்கவிதன்னைச் சொல்ல
நலமென்றே கொள்வதல்லால் நவில்வரோ புலவோர் குற்றம்

---

# நூன்முகம்

## அகவல்

அலைகட லுலகில் அரிதுமா னிடராய்
அவதரிப் பதுமு தறிஞர்கொள் ளையதாம்
அத்தகை பிறவி யடைவது நற்குல
நல்விட மாயி னழகென வறைவர்
அவ்வா றுதித்தும் அறிவருள் கல்வி
நிறையப் பெறுவது நீணிலத் தரிதாம்
கல்வி பெற்றுங் கவினுறு மடக்கம்
பெற்றுத் திகழ்வது பேசவு மரிதாம்
அத்தகை நலனெலாம் ஆதியி லிருந்தே
அடைந்து வளர்ந்திங் கழகார் சென்னையில்
பிரம்பூ ரதனிற் பிரபல மத்ரஸா
ஜமாலியா வென்னுந் தனிப்பாட சாலையின்
தலைமையா சிரியராய்ச் சார்ந்துமே மஜ்லி
ஸுல் உலமாவெனுஞ் சுகிர்தமார் சபையின்
உபாக்கி ராசே ராயு முயர்கனம்
மௌலவி பாவில் முஹம்மது மதாராலிம்
சாஹிப் அவர்களாய்த் தரைதனில் விளங்கி
அமர்ந்து ஹிஜிரியா யிரத்து முன்னூற்றுநாற்
பதிஞன் காண்டென ரபீஉல் அவல்
மதியெழு நான்கில் வளர்சனிக் கிழமை
மாநில மேற்ற மகிழ்ந்துவிண் ணடைந்தார்
இன்னவர் திருநெல் வேலி யென்னும்
ஜில்லா வதனைச் சேர்திரு நெல்வே
லித்தா லூக்கா வில்ஆ யங்குளத்
தில்கன மார்க்தொளிர் ஷேக் அப்துல்காதர்
இராவுத்தரவர்கட் கினியபுத் திராய்

ஆயிரத் தெண்ணூற் றறுபத்தாறெனும்
ஆண்டிற் பிறந்தார் ஆய்தரு மேலப்
பாளைய மதனிற் படிந்து மூவாண்டு
அரபி பாஷையை யன்புடன் கற்றூர்
பின்னெழிற் பேட்டையிற் பிரியமா யிஸ்லா
மியமதசட்ட மெல்லாந் தேர்ந்தார்
இனிய தமிழில் இஸ்லாமியமத
நூல்பல வியற்றிய நுண்ணறி வாளராம்
கனம் ஷேக் அப்துல் காதீர் ஆலிம்
சாஹிப் பவரிடம் சார்ந்துநான் காண்டு
ஒதிவேலூருக் குற்றுமத் ரஸயே
பாக்கியாத்துப் பசர்ஸாலி ஹாத்தின்
மாணவ்ராகி மாண்பினைப் பெற்றுத்
தென்னிந் தியாவில் திகழரபிப்பா
ஷைக்கோ ரூற்று யிருந்தே காலஞ்
சென்றூர் அவர்தம் சீர்த்தி யெம்மனோர்
செபபுதற் காமோ? சிறிதே புகன்றனம்
பெருநா லன்னூர் பிறங்கொளி யனைத்தும்
பேசிப் புகழப் பிரியமுற் றனமதை
வெகுசீக்கிரத்தில் விளம்புவமாதோ.

---

## தமிழ்ச் சிறப்பு

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதன மென திகழ் பரத கண்டமதில்
தக்கசிறு பிறை நுதலும் தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமுமதிற் சிறந்த திரவிட நற்றிரு நாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே.

கடலால் சூழப்பட்டுள்ள பூமிக்குப் பரதகண்டமே வதன மெனப் படும். பிறை நுதலும் அதன் மத்தியிலுள்ள திலகமும் என முறையே தக்ஷிணபாகத்தையும் தமிழ் நாட்டையுங் கூறுவர்.

---

## இரரகம் மத்யமாவதி தாளம் ஆதி

### பல்லவி

நம் நாட்டின் புதல்வரின் பெருமையைக் கேள்
நவ நாகரீகமுள்ள (நம்

## அனுபல்லவி

மன்னுயிரைத் தன்னுயிர் போல்
மனு நீதி தவராமல்
மன்னன் அக்பர் சக்ரவர்த்தி
நன்னயமாய் ஆளலையோ
பன்னரும் புத்தமதத்தை உன்னதமாய் ஓங்கச்செய்த
என்னரும் அசோகாதிபர் முன்னாளில் ஆளவில்லையோ நம்

## சரணம்

(1) கடுகைத் துளைத்துப் பெருங் கடலைப் புகட்டி விட்ட
சடைமுனி வள்ளுவரும் நடைதளர்ந்த ஔவையும்
மடை திறந்த வெள்ளம்போல் மட மடவெனச்சொரிந்
திடமஸ்தான் சாயபுவும் பாடல்கள் இயற்றலையோ (நம்)

(2) காமக்ரோதங்களைவென்ற பூமண்டலபூஜிதவான்
பாமாரும் பண்டிதரும் நேமத்துடனேவியப்பர்
நாமம் மீரா ஷாஹுல்மீது நானிலத்திலே யுதித்து
நல்லிசை யெங்கும்பரவ நாகூரில் வசிக்கல்லையோ (நம்)

---

## ஹரிகாம்போதி திருப்புகழ் மெட்டு
## இந்தியா இரத்தினங்கள்

1. நபிகாதை தன்னை கவியாகத்தந்த
கவிராஜ உமர் இந்தியரே
2. தவராஜ சிம்ம ஸ்வாமி விவேகர்
பலதேசம் புகழ் இந்தியரே
3. புவியில் கவீந்தர மகுடம் வகித்த
ரவீந்த்ர நாத் டாகூர் இந்தியரே
4. அறிவில் சிறந்து ரஸாயனவல்லோன்
ப்ரோபஸர் ரேயும் இந்தியரே
5. தருவின் மர்மம் திறமாய் அறிந்த
ப்ரோபஸர் போஸும் இந்தியரே
6. கண்டோர் வியக்கக் கணித மியற்றிய
ராமாநுஜமும் இந்தியரே
7. அண்டம் நடுங்க கலியுக பீமன்
ராம மூர்த்தியும் இந்தியரே
8. எண்ணிய வண்ணம் நுண்ணிய சித்திரம்
எழுதிய ரவிவர்மா இந்தியரே

9. விண்ணோர் வியக்க சங்கீதம் பாடிய
வைத்திய நாதனும் இந்தியரே
10. மதப்பற்றினாலே பெருநிதி வைத்த
முஹயத்தீன் ஜாமாலும் இந்தியரே
11. மதநூல் பயின்று குருவாக வந்த
முஹம்மத் மதாரும் இந்தியரே

இந்நிலவுலகில் இயல் இசை நாடகமென்னும் முத்தமிழொலி பெருகும் நாடாகிய திருநெல்வேலியைச் சார்ந்த ஆயுங்குளத்தில் கனம்ஷேக் அப்துல் காதர் இராவுத்தர் என்ற கனவான் ஒருவர் இருந்தார்.

பானுவின் கதிரா விடருறுங் காலம்
படர்தரு தருநிழ லெனலா
ஈனமுங் கொலையும் விளைத்திடும் பவநோ
யிடர் தவிர்த் திடுமரு மருந்தாய்த்
தீனெனும் பயிர்க்கோர் செழு மழை யெனலாய்க்
குறைஷியின் திலகமே யெனலாய்
முஹம்மது நபி பிறந்தனரே

என இத்தகைய மாண்பினை யுடையவராய் நபிபெருமான் உலத்திற்குத் தோன்றுவாராயினர். அவர்களைப்பின் பற்றி நடக்கத் தமிழ் நாட்டிற்கென்றே அப்துல் காதரது அருமைப் புதல்வராக 1866-ம் ஆண்டில் ஹாஜி முஹம்மது மதார் ஆலிம் சாயபு அவர்களை ஆண்டவன் படைத்தருளினர்.

கல்விப்பொருளானது செல்வப்பொருளைப் போல வெள்ளங் கொண்டு போகாததும், நெருப்பில் வேகாததும் கள்வர் அபகரிக்காததும், காவல் செய்ய வேண்டாததும், அரசரால் வவ்வப்படாததும், தாயத்தாரால் பங்கிட்டுக் கொள்ள முடியாததும், விரும்பினவர்கட்கெல்லாம் தடையின்றி வழங்கினாலும் மேன்மேலும் வளர்வதன்றிக் குறைவு படாததுமாய், அஞ்ஞானமாகிய பிணிக்கு மருந்துமாயிருப்பதனால் அதனைச் செல்வப் பொருளிலும் சிறந்ததாகக் கருதி 'தந்தை மகற்காற்று நன்றியவையத்து முந்தியிருப்பச்செயல்' ஆதலால் அவரது தந்தையார் அவரை மேலப்பாளையம் மதரஸாவிற்கு அனுப்பினர். ஆங்கு மூன்று வருடம் ஓதி வந்த பின்னர் பேட்டைக்குச்சென்று இஸ்லாமிய மத பன்னூலாசிரியர் கனம் ஷேக் அப்துல் காதர் ஆலிம் சாஹிபுவிடம் சுமார் நான்கு வருஷம் ஓதுவாராயினர். வேலூர் மத்ரஸயே பாக்கியாத் ஸாலிஹாத் தென்னும் கல்லூரியையடைந்து கனம் ஆலா ஹஸரத்மௌலானா ஷம்ஸுல் உலமா அப்துல் வஹ்ஹாப் சாஹிபின் கீழ் மாணவராக

விருந்து நான்காமாண்டில் ஆலிமானார். அங்கிருந்தும் வாணியம் பாடியை நாடி மதநூல் உலூம் மத்ரஸாவில் மௌலவிஷேர் அலி சாஹிப், பெஷாவர் வாசியான கனம்மௌலவி ஜமான்ஷாஹ் சாஹிப் முதலானோரிடம் மூன்று வருஷம் கல்விபயின்று மௌல்வி பாவில் பட்டம் பெற்றனர். பின்னர் இல்லற வாழ்க்கையிற் புக வெண்ணித்தனக்கேற்ற ஒரு கன்னியை மணந்து இரு ஆண் மகவைப்பெற்றனர்.

"வணக்கமும் அறிவும் சேர்ந்த மனத்துறும் பொறையும் நல் [லோர்.
இணக்கமும் வறியோர்க் கீயும் இரக்கமும் நிறைந்த கற்பும்
குணக் கலை வல்லோராலும் குறித்தெடுத் தவர்க்கொப்பாகப்
பணக் கடு பாந்தட் பாரில் பகருதற் கரியவன்றே."

"மாசிலாக்குலத்து வந்தாள் வருவிருந்து உவப்பு ஊட்டும்
நேசமிக் குடையாள் கொண்கன் நினைப்பறிந்தொழுகும் [நீரான்
தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திடல் என்று மில்லாள்
பேசுதிண் கற்புவாய்ந்தாள் பெற்றதே கொண்டு உவப்பாள்"

என்னும் இவை முதலிய கற்பிலக்கணங்கள் அம்மாது சிரோ மணியிடம் இருந்து வந்தன. வாணியம்பாடி மத்ரஸாவிலேயே ஆறு வருஷகாலம் போதகராக அமர்ந்து வேலை பார்த்து வந்தனர்.

இவ்வாறிருக்க

" சீதவொண் கவிகை நீழல் திருந்திய குரிசிலானோர்
தூதென நபியின் பட்டந் துலங்கிய நான்காமாண்டில்
வேதநல்வணக்கம் யார்க்கும் விரித்துற விளக்கு மென்ன
வாதிதன் பருமான் மேற்கொண்டமரர் கோனுரைத்துப் [போனார்.

நபி நாயகத்திற்கு நபிப்பட்டம் வந்தநான் காமாண்டில் ஜனங் களுக்குப் பகிரங்கமாய்ப் போதனை செய்யுமாறு ஆண்டவன் கட் டளையிட்டனர். அவ்வாறே முஹம்மத் மதார் ஆலிம் அவர்கள் மௌலவிபாவில் பட்டம் பெற்ற ஆறுமாண்டில் தீன்கல்வியைத் தமிழுலகில் வழங்குதற்குரியவர் என ஆண்டவன் விரும்பினான். அன்றுதொட்டு அன்னார் அத்திருத்தொண்டினைச் சிரமேற் கொண்டு அநேக மாணவர்களை ஆலிம்பதவி அடையச் செய் துள்ளார்.

ஆயிரம் ஆடவர் ஒரு ஆலிம் ஆவரோ ! ஆயிரம் நக்ஷத்திரம் ஒரு சந்திரன் ஆகுமா. அன்னாரையன்றோ இறைவன் விரும்புவான்.!

ஆடுநாடு தேடினும் ஆனை சேனை தேடினும்
கோடிவாசி தேடினும் குறுக்கே வந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல் தாமே வந்து நிற்குமே.

என ஆன்றோர் கூறிய வண்ணம் தான தர்மஞ் செய்வதிலேயே தாராள சிந்தையினையுடைய வள்ளல் ஒருவர் சென்னையப்பன் பட்டணத்தில் கிளம்பினர். அவர் மிக மதப் பற்றுடையவர். தென்னிந்திய பிரபல வாத்தகரும் செல்வந்தருமாக விளங்கினர். ஹாஜி ஜமால் முஹைய்தீன் சாஹிபு என்னும் நாமதேயமுடையவர். சென்னை பிரம்பூரில் ஒரு அரபி மதரஸாவை ஏற்படுத்தும் வண்ணம் அவரது உள்ளத்தில் உதயமானது. அதனை இனிது நடத்த வல்ல ஆசிரியர் ஒருவரை அடைய விரும்பினர்.

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே.

உயர் குடிப் பிறப்பும் ஜீவகாருணியமும் கடவுள் வழிபாடும் மேன்மையும் நூற்களில் பழகிய தேர்ச்சியும் போதனா சக்தியும் அடையப் பெற்றவனே ஆசிரியனாவன். மேலும், அன்னான் உலக நடையை அறியும் திறமை வாய்ந்தவனாகவும் இருத்தல் வேண்டும். பெருமையும் வலிமையும் பொறுமையும் மாணவர் முயற்சிக்குத் தக்க பயனை யளிக்கும் தன்மையும் உள்ளவனாதலால் பூமிக்கு ஒப்பாகிறான். வெகு தூரத்திலிருந்தாலும் சபையோரால் காணக்கூடிய ஆகிருதியும் எதைக் கேட்பினும் மாணவர்க்குப் பரிந்து கற்பிக்கும் உதார குணமும் அளவறியக் கூடாத புலமை வாய்ந்திருத்தலும் பிறர் தன்னை வெல்லற்கரிய கல்வி கேள்விகளில் திறமையும் ஆசான் பெறுவதால் மலைக்கு ஒப்பாகிறான்.

சொற்பொருளின் இயல்பை ஐயந்திரிபற அறிவித்தலும் நடு நிலைமையிலிருந்து பக்ஷபாதமின்றி நியாயங் கூறுதலும் ஆசிரியன் இயல்பாதலால் அவன் நிறைக்கோலுக்கு உவமை ஆகிறான்.

பாடஞ் சொல்லுங் காலத்தில் முகமலர்ச்சி கொள்ளலாலும் எல்லோரும் விரும்பி வரவேற்கும் சிறப்பினைப் பெறுதலாலும் மலருக்குச் சமானமாவான்.

கனம் மௌலவி முஹம்மது மதார் ஆலிம்சாஹிபினிடம் மேற்கூறிய இலக்கணங்கள் இலங்கக் கண்ட பலர் அவ்வள்ளலாரிடம் வெகுவாய்ச் சிலாகித்துக் கூற இதுவும் எல்லாம்வல்ல இறை

18/991

வன் அருள் எனக் கருதி அக்கணமே ஆசிரியரை அழைத்து வரலாயினர். உதவி போதகர்களும் நியமிக்கப்பட்டனர். ஒரு சுப தினத்தில் மத்ரஸாஜமாலியா திறப்பு விழா வெகு விமரிசையாக நடைபெறலாயிற்று. திருவாங்கூர், மலையாளம், கொச்சி, குடகு, கோயம்புத்தூர் முதலிய சேரமண்டலத்தினின்றும் மதுரை திருநெல்வேலி என்னும் பாண்டிய நாடுகளினின்றும், திருப்பதி முதல் திரிசிரபுரம் வரையிலுள்ள சோழ தேசத்தினின்றும் இலங்கைத் தீவினின்றும் மாணவர் பலர் தலைமை ஆசிரியரது உத்தம குணங்களையும் போதனா சக்தியையும் கேள்வியுற்று இங்கு வந்து கூடினர். மௌலவி சாஹிப்பவர்கள் வித்தியார்த்திகளுக்கு நூலைக் கற்றுக்கொடுக்க வாரம்பஞ் செய்யு முன்னரே தனக்குரிய மேலான ஆசனத்தில் அமர்ந்து தன் வழிபடு கடவுளை வணங்கி, கற்பிக்கப் புகும் நூற்பொருளை உள்ளத்தில் அமைத்து பின்னர் துரிதப்படாமலும் கோபியாமலும் விரும்பி முகமலர்ந்து போதிக்கத் தொடங்குவர்.

அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமொடு
எத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே

குளிருக்குப் பயந்து அனல் காய்பவனைப் போலத் தன் ஆசிரியனை நெருப்பாகப் பாவித்து அச்சங் கொண்டு நீங்காமலும் கிட்டவணு காமலும் இருந்து ஆசான் சென்ற விடமெல்லாம் நிழலைப்போல் பின்தொடர்ந்து சென்று அவரது நோக்கம் அறிந்து மாணவர் பயின்று வரத்தலைப் பட்டனர்.

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலை இடை கடைமா ணாக்கர்

இத்தகைய சீடர்களின் தன்மை நன்குணர்ந்தவ ராதலால் அவ்வவருக்குத்தகுந்தபடி சிரமங் கருதாது இருபத்தாறு ஆண்டுகள் இத்திருத் தொண்டினைச் செய்வாராயினர்.

இங்கு கல்வி பயின்றவர்கள் நூற்றுக்கணக் காய் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஆலிம்களாக விளங்கு கின்றனர். வித்தியார்த்திகளுக்கு அரபி பாஷா ஞானத்தையும் இஸ்லாமதக் கல்வியையும் கற்பித்து வந்த தோடு அப்பேரிதைக் கப்போது அவரவர் ஒழுக்கத்தையும் சீர்திருத்து வதிலும் அவர்கட்கு அநுகூலத்தைத் தேடுவதிலும் கண்ணுங் கருத்து மாயிருந்து வந்தனர்: ஆலிம் மீது அன்பு மேலிடவே கல்லூரிபோஷகர் தன் பௌத்திரியை அவர

து சிரேஷ்ட குமாரருக்கு விவாஹஞ் செய்துகொடுத்து மௌலவி சாஹிபை தனது முக்கிய பந்துவாக்கிக் கொண்டனர். அரபி பாஷையிலும் மதக் கல்வியிலும் அளவிறந்த பாண்டித்தியம் இருந்தும் அன்னார் அணுவளவும் கல்விச் செருக்குக் கொண்டாரில்லை.

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்கு றூஉம்
வெங்குறை தீர்க்கிப்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று

எனப்பெரியார் கூறியபடி அவர் சுயநலங் கருதாது பிறர்க்கு உதவிபுரிதலையே நோன்பாகக் கொண்டனர். எப்போதும் இவரைக் காண்போரது கவலையை நீக்கும் காந்தியுடையவர். காமக் ரோத மோக மத மாச்சர்யம் என்ற மனப் பேய்களை வென்ற புண்ணிய புருஷர் இவர். மனத்தை யடக்கி யாளுந்தன்மை ஞானிகளுக்கு இயல் பாகவுண்டு.

ஞானியின் ஆட்ட மெல்லாம் ஞாலத்தார் உய் வதற்கே
ஞானியின் ஓட்ட மெல்லாம் ஞாலத்தார் செழிப்பதற்கே
ஞானியின் நாட்ட மெல்லாம் ஞாலத்தார் பருவத்திற்கே
ஞானியின் தேட்ட மெல்லாம் ஞாலத்தார்க் கருள்வதற்கே

என்றறிந்த பலர் இந்தியாவின் பற்பல விடங்களினின்றும் அரேபியா, எகிப்பது, மொரகோ, காபூல் முதலிய பலதேசங்களினின்றும் மத்ரஸாவைக்காண வருபவர்களை ஆசிரியர் உள்ளன்போடு உபசரித்து வந்தனர். வந்தவர்களின் விருப்பத்தை முழு மனதுடனே நிறை வேற்றி வைப்பர். சிறு குழந்தைகளிடம் மிக்க அன்பு பாராட்டி, அவர்கள் விரும்பிக் கேட்பதை அரை நொடியில் தருவித்துக்கொடுப்பர். தந்தையைப்போல கல்விச் செல்வத்தை நாடினரே யொழிய பொருள் செல்வத்தை அவர் ஒருபோதும் பொருட் படுத்தினரில்லை. நியாய விரோதமான காரியங்களென மனதில் பட்டால் அவைகளை அங்கீகாரம் செய்யமாட்டார்.

"கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய் யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவி யொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே

என்றபடி ஊறு, சுவை, ஒளி, நாற்றம் ஒலி முதலிய அவாக்களையுடைய மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் பொறிகளைப் பற்பல நிலைமையில் விடாது, அவற்றையடக்கி பெருங்கருணைக்கடவுளை மிகுந்த பயபத்தியோடு தொழுவார்கள்.

## திருப்புகழ் மெட்டு

ஓல மிட்ட சுரும்பு தன தன வென
நீல நிறக் குயில்கள் குகூ குகூ வென
சோலையிலே மயில்கள் தத்தோம் தத்தோமென
நடன மாடும்

வாரிதனில் நாரைகள் பளீர் பளீரென
சீரிய நற்றென்னலும் சிவீ சிவீயென
தாமரையி லன்னங்கள் கலீர் கலீரென
ஒலிகு முறும்

வீசிய நல் தரங்கம் சிவீர் சிவீரென
ஓசை பெற்ற காவிரி திடீர் திடீரென
சீரிய நற்றிவலை துளீர் துளீரென
மிக சிந்தும்

தேவர்கள் அனைவரும் தேவா தேவாவென
பாவொலி பல பாடி ஜய ஜய வென
சேவித்திறைஞ் சிடவே கணீர், கணீரென
திருவரங்கமே. என

விளங்கும் சோழ நாட்டின் திலகமென வழங்கும் திரிசிரபுரத்தில் தமிழ் முஸ்லிம் முன்னேற்ற மடையு மாறு பலர் கூடி மஜ்லிஸுல் உலமா வென்னும் சபையொன்றை எற்படுத்தியுள்ளார். அவ்வவைக்கு முக்கிய அங்கமாகவும் உபசபா நாயக ராகவு மிருந்து உலகத்திற்கு பேருதவி புரிந்து வந்தனர். மேலும் நபிபெருமானின் அரும் பெருங்குணங்களைப் பிறரறியச்சொல்லுவதிலும் கேட்பதிலும் அளவொணா ஆனந்தம் பெறுவர். தேசாபிமானமும் மதாபிமானமும் நிரம்பப்பெற்று விளங்கினர். கதர் உடையைக் கட்டுவதிலேயே கருத்தாயிருந்து காலங்கழித்தனர். ஒழுக்கமே உருவெடுத்து வந்தனர்.

---

## அகவல்.

இரக்க மென்பதின் இலக்கணம் யாதெனில்
பரக்க எடுத்துப் பகருவேன் கேண்மோ ?
இயற்கையி னொருவர்க் கெய்து நற்குணமது ;
செயற்கையாம் வலுவிற் சித்திப்ப தன்று காண் ;
வாய்ந்திடும் மேக மண்டலத்திருந்து
பாய்ந்து கீழ் நோக்கிப் பாரிட முழுவதும்

வளனுறப் பெய்யும் வானமு தெனும் நீர்த்
துளி நிகர்த் தனுவனு வாகத்தோன்றியே
பெருகுவ தொன்றெனப் பேசுவர் பினுமது
உருகி இரங்கிடும் ஒருவன் றனக்கும்
இரங்கப் படுபவன் தனக்கும் இன்னுயிர்த்
திரங்கொள் துணையெனும் தேவானுக் கிரகமாம் ;
கடவுட் குணங்களில் கலந்த தொன்றுமது ;
புடவியில் அதனுல் பொருந்தும் அதுவே
மன்னுதி மன்னர் கொள் மணி முடி யதனினும்
மின்னு பரணமாம் ; வேந்தரிடம் அது
எவ்வள விற்கவ் வளவிருந் திடுமோ
அவ்வள விற்கவ் வளவுக் கிரந்தணிந்
தருளும் நீதியின்நலம் அனைத்து மிவ்வண்ணம் அவ்
வரசர்தம் அதிகா ரந்தனக் குயர்வு
ஏறிட ஏறிட அதுவே யெங்கும்
வீறுறும் ஏகா திபனுய் விளங்கும்
பரனதி கார மயமாய்ப் பரவிடும்
நானென வுதித்த நக்ஷத் திரனே !
ஆதலால் சற்று நான் அறைவதைக் கவனியாய்
ஆதரவைப் பார் அரும்பர கதிக்கே
நம்மை ரட்சிக்க நல்லிரக் கந்தனை
மன்றாடிக் கேட்பதை மதியில் நீ அறிகுவாய்
இதரர்மேல் அவ்வணம் நாமும் இரங்குதல்
இதமுறு கடமையாம் இதை மனத் திருத்துவாய் - என

வெனிஸ் நகர வாணிபன் கதையில் யூதனுக்குச் சொல்லிய விதமாய் இரக்கத்தின் தன்மையைப் பிறரறியக்கூறியும் அவர்கட்கு அதனை தந்து உயர்ந்த ஒழுக்கத்தால் காட்டியும் ஜீவகாருணியத்தை உண்டு பண்ணுவர். சுருங்கச் சொல்லில் கல்வியறிவு ஆழ்ந்த ஞானம், உண்மை, அடக்கம், உபசாரம், சுய நலமறுப்பு, அன்பு, அனுதாபம், ஈகை முதலிய குணங்கள் ஒருங்கேயமையப் பெற்றிருந்தனர்.

அரபி நாட்டிலும் அதனைச் சார்ந்த முஸ்லிம் உலக த்திலும் இந்துஸ்தானிலும் சேரசோழ பாண்டிய நாடுகளிலும் மௌலவியவர்களை அறியாதவர் ஒருவருமில்லை.

மாதவ நபியிவண் வருகின் றாரெனக்
காதினிற் கேட்டலுங் களித்தன் சாரிகள்

சீதவொண் கவிகையின் றிசையை நோக்கியப்
பாதையி னிடமறப் பற்றி யேகினர்.

நபிபெருமானவர்களின் வருகையை யறிந்த மதினாவிலுள்ள அன்சாரிகள் ஆவலுடனே எதிர் வந்து கண்டு வணங்கி நாயகத்தை வரவேற்று உபசரித்த விதமாக கனம் மௌலவி பாவில் ஹாஜு முஹம்மத் மதார் ஆலிம் சாஹிபவர்களின் வருகையை முன்னறிந்த முஸ்லிம் கூட்டத்தார் அன்னாரை ஆங்காங்கு தரிசித்து மன வுவப்புடனும் பக்திவினயத்தோடும் உபசரிப்பார்கள். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் ஆதலால் மௌலவியவர்கள் அரும் பெருங் குணங்கள் அமைந்த மகான்களைக் காணநேரிட்டால் அவர்களைத் தமது ஆசிரமத்திற்கு வந்தருளுமாறு வேண்டிக்கொள்வர். தாமிருக் கும் கல்வி நிலையத்தில் அரைக்கணமேனும் தனித்திருந்தாரில்லை. ரபியுல் மாதம் 28-ம் தேதி சனிக்கிழமை யன்று மாலை மவுண்ட் ரோட்டிலுள்ள மத்ரஸயே ஆஸம் கலாசாலைக்குப் பிரசங்கத்திற்குப் போய்த்திரும்புங் காலையில்

அஸர் தொழுகைக்கு நேரம் வந்தபோது பள்ளி வாசலுக்குச் சென்று வழக்கம் போல் ஜமா அத்துடன் தொழுகையை முடித் தார்கள். வரும் வழியில் வண்டியிலே சாய்ந்து கொண்டவண் ணம் மூன்று தரம் அல்லாஹ் என்று சொன்னார்கள். அவர்கள் உயிர் ஆண்டவன் பக்கமாகச் சென்று விட்டது. மறுநாள் பத்து மணிக்கு வெகு ஜனக் கூட்டத்தினிடையில் அவர்களது சரீரம் ஜமாலிய்யா கல்லூரியிலேயே மௌலானா ஸையிது உஸேன் பாபக் கீது அவர்கள் பக்கல் அடக்கஞ் செய்யப்பட்டது. இவர் மரணம் இந்தியா விற்கு பெருத்த நஷ்டமாகும். இறைவன் மறு மையில் அவர்கட்கு மேலான நற் பதவியைக் கொடுப்பதோடு அவர் களின் இருமக்களையும் அவர் சென்ற வழியிலேயே

நடக்கச செய்து, அவர்கள் இனிது நடாத்திய கல்லூரியை யும் மேன்மேலும் அபிவிருத்தியாகு மாறு ஆண்டவன் அருள் புரிவானாக. ஆமீன் ! ஆமீன் !!

வாசகர்களே ! இஸ்லாமுடைய மூல மந்திர மாகிய கலிமா வின் முக்கிய கருத்தை யறிய வேண்டும்.

---

அகவல்

அரிது அரிது மானுட ராதல் அரிது
மானுடரா யினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையு
ஞானமும் கல்வியு நயத்தல் அரிது
ஞானமும் கல்வியு நயந்த காலையுந்
தானமும் தவமும் தான் செய லரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே

என்று ஒளவைப் பிராட்டியார் கூறியுள்ளார். இவ்வுலகத்தில் ஜனிக்கும் படியான எறும்பு முதல் எண்பத்து நான்குலக்ஷம் ஜீவ கோடிகளுள் உத்தமமானது மானிட ஜென்மம். அப்படிப்பட்ட சிரேஷ்டமான ஜென்ம மெடுத்த மனுஷ்யரே நற்கதி யடையும் உபாயத்தை மேற்கொண்டொழுக உரியராவர். ஆத்ம சொரூப மோ அழிவில்லாதது. பரிசுத்தமானது. இப்பிரபஞ் சத்தில் அருமையான இந்த ஜடத்தை பெற்ற நாம் இங்கு தாமரை யிலை யைப் போல் வாழ்தல் வேண்டும். தாமரை ஜலத்திலுண்டா னுலும் அதனல் அது நனைகிறதில்லை. அதுபோல உலக விவகா ரங்களில் புத்தியைச் செலுத்தினுலும் எல்லாக் கருமங்களையும் கடவுளுக்கே அர்ப்பணஞ் செய்து, நம்முடைய ஹிருதயத்தையும் சரீரத்தையும் கடவுள் தன் காரியத்திற் கென்றே நமக்குத் தந்தருளினரென்ற திடசித்தத்தைக் கொள்ளுதல் வேண்டும். எனெனில் பெரும்பான்மையோர் கருதுவதும்சாஸ்திர முறையிடுவ தும் தெய்வம் ஒன்று உண்டென்றே. ஆதலின் நாம் கடவுளை வழி படல் வேண்டுவது அத்தியாவசியமாம். அவ்வாறு வழிபடுவர்க்கு நித்யானந்த வாழ்வு கைகூடும் என்பது சத்தியம். தெய்வம் எங்கும் நிறைந்தது ; ஆதியந்தமற்றது. தனக்கென்று ஒருருவமற்றது ; ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லது என்று அறிவின் மிக்கார் சொல்வதோடு வேதமும் கூறுகின்றது. தாய் தன் குழந்தையின்

மீது வைத்த கருணையால் அடித்துப் பாராட்டுகின்றனள். நம்முடைய தேகம் துன்பத்தைக் கொடுப்பதாயிருந்தாலும் அது ஆத்ம ஞானத்தை யடைய கடவுளால் கொடுக்கப்பட்டது. அத்தகைய உடலைக் கொண்டுதான் இறைவனது அருளைப் பெற்று அவனைச் சேருதல் ஒவ்வொருவருடைய இன்றியமையாக் கடமை. நமக்குள்ள வயது நூறில், உறக்கம், பேதை, பால்யம், யௌவனம் விருத்தாப்பியம், பிணி, பசி முதலியவற்றிற்குரிய காலம்போக, மீதியாயுள்ள சுவல்ப காலத்தில் பக்தி செய்து கொள்வோம் என்றால் அதுவும் சாத்தியமானதாகக் காணப்படவில்லை. நீர்க்குமிழி போலுள்ளது ஆகையால் நமது மூவாசைகளையும் நீக்கல் வேண்டும்.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடி
பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவட்டுத்தொன் மரத்திடுக்கிற் கானுழைத்துக் கொண்டே
யாப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்கைப் போல
வகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீர் நீரே.

என பெரியார் பணித்தருளியபடி மூவாசைகளினால் பீடிக்கப்பட்டு, கடவுளை மறந்து அவரது ஆக்ஞைக்குட்படாமல் பாமரராயிருந்து காலத்தை போக்கல் ஆண்டவன் கொள்கைக்கு விரோதமாகும். உலகத்தில் தெய்வபக்தியுள்ளவன் சகல சம்பத்துகளையும் பெற்று நல்வாழ்வினைப் பெறுவன். உங்கள் எழில் ஞானி -மௌலானா மௌலவி. ப. சே. ஹாஜி முஹம்மத் மதார் சாஹிபவர்கள் உபதேச மொழிகளை மறவாதீர்கள்! அவர்களது நடத்தையைக் கைப்பற்றுவீர்களாக. ஆண்டவன் அருளைப் பெறுவீர்களாக.

சுபம். சுபம்.

4
1325

PRINTED AT THE SRI RAMA PRESS, 15, BROADWAY, MADRAS.